**நாவிதன்வெளி பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நாவிதன்வெளி பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நாவிதன்வெளி பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு )**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.
இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமுல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 55,020 பெறுமதியான மின்சாரப் பொருட்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டில் சபையினால் மேற்கொள்ளப்பட்ட நிலையான சொத்துக்கள் கொள்வனவு மற்றும் விற்பனைகள் முறையே ரூபா 666,227 மற்றும் ரூபா 16,489 தொகைகளான போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கையின் கீழ் முன் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் நிதியாண்டில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (iii) ரூபா 600,000 பெறுமதியான இரு உழவு இயந்திர பெட்டிகள் அலுவலக உபகரணக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. | எதிர்வரும் நிதியாண்டில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

-----------------

**2.1 நிதி விளைவுகள்**

---------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 4,646,166 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 3,628,514 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

------------------------

**2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

--------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) வீதவரி மற்றும் வரி | | |
| சபையின் அதிகார பிரதேசத்திற்குட்பட்ட பிரதேசத்தில் காணப்படும் 547 வர்த்தக நிலையங்கள் மற்றும் 4,950 வீட்டு மனைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வீத வரிகள் கணிப்பிடப்பட்டு அறவிடுவதற்கான நடவடிக்கைகள் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வீத வரியினை அறவிடுவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும். | வருடாந்தம் வீதவரிகளினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) வாடகை | | |
| அறவிடப்பட வேண்டிய இறைச்சிக்கடை குத்தகை நிலுவை மற்றும் சந்தை கடையறை வாடகை நிலுவையான ரூபா 1,379,930 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அது 1-3 வருட காலத்திற்கு இடைப்பட்டதாகும். | அறவிடுவதற்கும் பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | அறவிட வேண்டிய வாடகை வருமானங்களினை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

-------------------------

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவுகளின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொது மக்களின் நல்வாழ்வு, வசதிகளும் நலன்புரியும் ஆகியன சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் சபையினால் நலன்புரி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் சுயதொழில் வருமானத்தை ஊக்குவிக்கும் நோக்கில் ரூபா 261,700 பெறுமதியான 33 ஆடுகள் 16 பயனாளிகளிற்கு வழங்கப்பட்டிருந்தும் இச்செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த பிரதிபலன்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | இதனை பராமரிக்கும் பொறுப்பு கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. | செயறதிட்டங்கள் விணைத்திரனாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |